# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## ஆண்டறிக்கை

## 2006-2007

தமிழ் நாடு அரசு அச்சுத்துறை ஆணையரால் தமிழ்நாடு அரசுக்காக அச்சிடப் பெற்றது

# தமிழ்நாடுஅரசுப் பணியாளர் தேர்வாணையம்

# ஆண்டறிக்கை 2006 - 2007

115-67—1

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
# ஆண்டறிக்கை 2006-2007

## பொருளடக்கம்


| வரிசை எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | செயல்களும் கடமைகளும் | 2-4 |
| 2 | நேரடித் தேர்வுகள் | 4 |
| 3 | தகுதியும் பொருத்தமும் உடைய வேட்பாளர்கள் இல்லாமை | 4 |
| 4 | பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல், ஒழுங்கு நடவடிக்கை, முறையீடுகள், மனுக்கள், சட்ட முறை ஒழுங்கு முறை விதிகள், தற்காலிக நியமனங்கள், விதி தளர்த்தல் முதலியன | 5-7 |
| 5 | தெரிவுத் தேர்வுகள் அல்லாத எழுத்துத் தேர்வுகள் | 8 |
| 6 | அரசும் தேர்வாணையமும் | 9-12 |
| | **பின் இணைப்புகள்** | |
| 1 | தேர்வாணையத்தின் பணியாளர் பட்டியல் | 14 |
| 2 | நேரடித் தெரிவு இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட புள்ளி விவரம் | 15 |
| 3 | வருவாய் மற்றும் செலவு | 16 |
| 4 | வெளியான அறிவிக்கை விளம்பரங்கள் | 17 |
| 5 | எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு விவரம் | 17-18 |
| 6 | பொருத்தமும் தகுதியும் உடைய வேட்பாளர்கள் இல்லாத பணிகள் குறித்த விவரம் | 19 |
| 7 | பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலம் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்ட பதவிகள் | 20-21 |
| 8 | ஒழுங்கு நடவடிக்கைகள். மனுக்கள் மற்றும் முறையீடுகள் விவரம் | 22-23 |
| 9 | தேர்வாணையத்தின் ஒழுங்கு முறை விதி 1954 விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் நியமனங்கள் முறைப்படுத்தியதன் விவரம் | 24-25 |
| 10 | தற்காலிக நியமனங்கள் மாநிலப் பணி/சார்நிலைப் பணி/அமைச்சுப் பணிகள் 24 மாதங்களுக்கு மேல் இசைவு அளித்த விவரம் | 26 |
| 11 | 1930 முதல் தற்சமயம் வரை உள்ள தேர்வாணைய தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் விவரம் | 27-30 |
| 12 | அரசு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டது மற்றும் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்கப்படாத நிகழ்வுகள் குறித்து கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான புள்ளி விவரம் | 30 |
| 13 | வரைபடங்கள் | 31-32 |


115-67—1a

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## ஆண்டறிக்கை 2006-2007

முன்னுரை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் இந்திய அரசியலமைப்புப் பிரிவு 315-இன் படி அமைக்கப்பட்டுள்ளது. தேர்வாணையத்தில் தலைவர் ஒருவர், உறுப்பினர் பதினொன்று என்பது ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையாகும். தற்போது தலைவரும், பத்து உறுப்பினர்களும் உள்ளனர்.

இவ்வாண்டிற்கான தேர்வாணையத்தின் கூட்டமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :-

| | |
|---|---|
| திருமதி. யாஸ்மீன் அகமது, இ.ஆ.ப. (ஓய்வு) | தலைவர் |
| டாக்டர். இரா. பெருமாள்சாமி, எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி., (26.03.2007 அன்று பணியில் இருந்து ஓய்வு பெற்றார்) | உறுப்பினர் |
| டாக்டர். (திருமதி) கு. ம. இராமாத்தாள், எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி., (31.01.2007 அன்று பணியில் இருந்து ஓய்வு பெற்றார்) | உறுப்பினர் |
| திரு. அ. நவநீதகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல்., | உறுப்பினர் |
| திருமதி.பா. நீலாம்பிகை, எம்.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திருமதி. நீ.கு. கலைச்செல்வி, பி.எஸ்.சி., பி.எல்., | உறுப்பினர் |
| பேராசிரியர். ஆர். சுப்பிரமணியன், பி.எஸ்.சி., எம்.எல்., | உறுப்பினர் |
| திரு. பெ. தீர்த்தாரப்பன், பி.எஸ்.சி., பி.டி., | உறுப்பினர் |
| திரு. இரா. செங்குட்டுவன், பி.இ., பி.ஜி.டி.எம்., | உறுப்பினர் |
| திருமதி. சி.டி. திலகவதி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்., பி.ஜி.டி.ஜே.எம்.சி., | உறுப்பினர் |
| டாக்டர். ரெ. நாராயணசாமி, எம்.ஏ., பி.எட்., பிஎச்.டி., | உறுப்பினர் |
| திரு. மு. இராமசாமி , எம்.எஸ்.சி., எம்.ஏ., பி.எல்., (19.05.2006 அன்று உறுப்பினராக பணியேற்றார்) | உறுப்பினர் |

| | |
|---|---|
| திரு. இராமேஷ் குமார் கண்ணா, இ.ஆ.ப., (26.05.2006 அன்று விடுவிக்கப்பட்டார்) | செயலாளர் |
| திரு. ஆனந்த் ராவ் விஷ்னு பட்டேல், இ.ஆ.ப., (5.6.06 முதல் 29.06.2006 வரை பணியாற்றினார்) | செயலாளர் |
| திருமதி. சந்தியா வேணுகோபால் -சர்மா, இ.ஆ.ப. ( 06.06.2006 அன்று விடுவிக்கப்பட்டார்) | தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர் |
| திரு. ராமேஷ் சந்த் மீனா இ.ஆ.ப., (30.06.2006 அன்று பணியேற்றார்) | தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர் |

மார்ச் 31, 2007இன் நிலையில் தேர்வாணையத்தின் பணியாளர் விவரம் பின் இணைப்பு-1இல் கொடுக்கப்பட்டுள்ளது.

# பகுதி-1

## செயல்களும் கடமைகளும்:

தேர்வாணையம் ஆற்ற வேண்டிய பணிகள் என்ன என்பதன் விவரங்கள் இந்திய அரசியல் அமைப்புப் பிரிவு 320-இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

மாநிலப் பணிகளில் பணி நியமனம் பெற உரிய தேர்வுகளை தேர்வாணையம் நடத்த வேண்டும். மேலும் மாநில அரசு, தன் பணியாளர்களை எந்த முறையில் தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டும், பணி விதிகள் உருவாக்குதல் மற்றும் மாற்றம் செய்தல், ஒரு பதவிக்கு பதவி உயர்வு மற்றும் பணி மாற்றம் மூலம் நியமனம் செய்வதில் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள், அரசு ஊழியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல், பணியாளர்களுக்கு பணிக்காலத்தில் ஏற்படும் செலவினம் மற்றும் தீங்குகளுக்கான இழப்பீடு வழங்குவதில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் ஆகிய பொருள்கள் குறித்தும் தேர்வாணையத்தினைக் கலந்தாலோசித்து முடிவெடுக்க வேண்டும. அரசு ஊழியர்களுக்கான துறைத் தேர்வுகளை தேர்வாணையம் நடத்துகின்றது. இந்திய அரசுப் பாதுகாப்புத்துறை சார்பாக டேராடுனில் உள்ள இந்தியப் பாதுகாப்புக் கல்லூரியால் நிர்வகிக்கப்படும் பள்ளியில் மாணவர்களை சேர்ப்பதற்கான தேர்வையும் தேர்வாணையம் நடத்துகின்றது.

## வேலைப் பளு :

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் செய்து முடித்த தேர்வுப்பணி விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

I. நேரடித் தேர்வு

1. முதல் நிலைத் தேர்வு -ஏதுமில்லை -

2. முதன்மை எழுத்துத் தேர்வு :-

| | | |
|---|---|---|
| தேர்வுகளின் எண்ணிக்கை | : | 4 |
| காலியிடங்களின் எண்ணிக்கை | : | 1583 |
| தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் | : | 1,95,644 |

3. நேர்முகத் தேர்வு :-

| | | |
|---|---|---|
| தேர்வுகளின் எண்ணிக்கை | : | 4 |
| காலியிடங்களின் எண்ணிக்கை | : | 301 |
| தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள்; | : | 618 |

4. இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் :-

| | | |
|---|---|---|
| இறுதி முடிவு செய்த தெரிவுகளின் எண்ணிக்கை | : | 6 |
| காலியிடங்களின் எண்ணிக்கை | : | 2599 |
| இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை | : | 2305 |

## II. இதர தேர்வு விவரங்கள்

**1. துறைத் தேர்வு**

| | மே 2006 | டிசம்பர் 2006 |
|---|---|---|
| விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை | 47259 | 39732 |
| வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை | 17326 | 15040 |

**2. அரையாண்டுத் தேர்வு**

2006 ஆம் ஆண்டு செப்டம்பர் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை : 42

2007 ஆம் ஆண்டு மார்ச் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை : 35

3. கல்வித் தகுதி/வயது முதலியவற்றில் விதி தளர்த்தியது : ஏதுமில்லை
4. பணி மாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலம் தெரிவு செய்தல் : 843 நபர்கள்.
5. ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதல் அளித்தல் - அமைச்சுப் பணியில்; : 52 நபர்கள்.
6. ஒழுங்கு நடவடிக்கை -அரசுக்குத்தேர்வாணையம் தன் கருத்துகளை தெரிவித்த வழக்குகள் : 486 நேர்வுகள்.
7. ஒழுங்கு முறை விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் நியமனம் செய்யப்பட இசைவு அளிக்கப்பட்டவை : 635 நேர்வுகள்.:
8. வரவு மற்றும் செலவு (ரூபாய் ஆயிரங்களில்)

| | |
|---|---|
| வரவு | 5,61,82 |
| செலவு | 14,43,52 |

வரவு மற்றும் செலவின விவரங்கள் பின் இணைப்பு-3ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**9. அறிவிக்கைகள் :**

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் மாநிலத்தில் பல்வேறு பணிகளில் 6 பதவிகளுக்கான காலியிடங்களுக்கு விண்ணப்பங்களைக் கோரி 6 அறிவிக்கை விளம்பரங்களை வெளியிட்டது. அப்பதவிகளின் காலியிடங்களின் எண்ணிக்கை 4069 விண்ணப்பித்தவர்கள் 8,71,649 ஆகும். இதன் விவரங்கள் பின் இணைப்பு -4ல் கொடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு:- மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை விளக்கும் வரைபடங்கள் பின் இணைப்பு -13ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## 10. சீர்திருத்தம் மற்றும் புதிய மாற்றங்கள்

மற்ற ஒத்த பணியமைப்பு உடைய நிறுவனங்களில் ஏற்படும் முன்னேற்றங்களையும், தேர்வு முறைகளில் ஏற்படும் மாற்றங்களையும் இத்தேர்வாணையம் அவ்வப்பொழுது ஆராய்ந்து தனது தெரிவு முறைகளில் உரிய மாற்றங்களை செய்து வருகிறது.

# பகுதி-2

### நேரடித் தெரிவுகள்;

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் 6 தெரிவுகளுக்கு இறுதி முடிவினை அறிவித்தது. 2599 காலியிடங்களுக்கு இறுதியாக 2305 விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்தது. இறுதி முடிவு செய்த 6 தெரிவுகளின் புள்ளி விவரங்கள் பின் இணைப்பு - 2ல் கொடுக்கப்பட்டுள்ளன..

### முதன்மை எழுத்துத் தேர்வுகள்

அறிக்கைக்குரிய ஆண்டில் பல்வகைப் பணிகளில் 1583 காலியிடங்களை நிரப்புவதற்கு 4 முதன்மை எழுத்துத் தேர்வுகள் நடத்தப்பட்டன. இத்தேர்வுகளுக்கு 1,95,644 விண்ணப்பதாரர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

### வாய்மொழித் தேர்வுகள்

அறிக்கைக்குரிய ஆண்டில் பல்வேறு பதவிகளில் 301 காலியிடங்களை நிரப்ப 4 பதவிகளுக்கு வாய்மொழித் தேர்வுகள் நடத்தப்பட்டன. மொத்தம் 9 வேலை நாட்களில் தேர்வாணையம் நேர்முகத் தேர்வுகளை நடத்தியது. நேர்முகத் தேர்வுகள் முற்பகல் மற்றும் பிற்பகல் என இரு அமர்வுகளாக அமைக்கப்பட்டு நடந்தன. சில நாட்களில் அதிகபட்சமான 6 குழுமங்கள் முற்பகலும் பிற்பகலும் இயங்கின. மொத்தம் 46 நேர்முக அமர்வுகள் நடத்தப்பட்டன. 618 விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர்.

அறிக்கைக்குரிய ஆண்டில் நடந்த முதல்நிலை, முதன்மை எழுத்துத் தேர்வுகள் மற்றும் வாய் மொழித் தேர்வின் விவரங்கள் பின் இணைப்பு -5ல் கொடுக்கப்பட்டுள்ளன.

# பகுதி-3

### தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் இல்லாதப் பதவிகள் :

அறிக்கைக்குறிய ஆண்டில் 293 காலியிடங்களுக்கு உதவி அறுவை மருத்துவர் தனித்தன்மை பதவியில் தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் கிடைக்காமையால் அவை நிரப்பப்படவில்லை. இதன் விவரம் பின் இணைப்பு - 6ல் கொடுக்கப்பட்டுள்ளது.

# பகுதி -4

**பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலமாகத் தெரிவு செய்தல், ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள், முறையீடுகள், மனுக்கள், சட்டமுறை, ஒழுங்குமுறை விதிகள், தற்காலிக நியமனங்கள் முதலியன:**

1. **பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலமாக தெரிவு செய்தல் :**

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் மாநிலப் பணிகளில் தொடர்புடைய சார் நிலைப் பணிகளிலிருந்து பணிமாற்றம் மூலம் தெரிவு செய்தல் மற்றும் மாநில பணிகளுக்கிடையே பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல் ஆகிய பொருள் குறித்த குறிப்பீடுகளை ஆய்வு செய்தது. அவ்வகையில் 20 பணிகளில் 843 தகுதியும் பொருத்தமும் உடைய நபர்களைத் தெரிவு செய்தது. இதன் விவரம் பின் இணைப்பு-7ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2. **ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள், முறையீடுகள், மனுக்கள் முதலியன:**

| | | |
|---|---|---|
| அ I. | செயல்நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள் (சென்ற ஆண்டு ஏப்ரல் திங்கள் 2006-ல் நிலுவையில் இருந்த 44 வழக்குகள் உட்பட) | 970 |
| II. (i) | தேர்வாணையம் கருத்துத் தெரிவித்த வழக்குகள் | 458 |
| (ii) | தேர்வாணையத்தின் ஆய்வில் உள்ள வழக்குகள் | 103 |
| (iii) | உரிய நடைமுறைகளைப் பின்பற்றி அனுப்புமாறு அரசுக்குத் திருப்பியது. | 57 |
| (iv) | சில ஆவணங்கள் அல்லது விவரங்கள் அரசிடம் கேட்கப்பட்ட வழக்குகள் | 352 |
| III. | வழங்கப்பட்ட தண்டனையில் மாற்றம் செய்யுமாறு பரிந்துரை செய்யப்பட்ட வழக்குகள் | 13 |
| ஆ I) | அரசுக்குத் தேர்வாணையத்தின் கருத்துத் தெரிவிக்கப்பட்ட வழக்குகள் | 486 |
| II) | அவற்றில் அரசு நடவடிக்கை எடுத்து ஆணைப்பிறப்பித்த வழக்குகள் | 246 |
| III) | அரசு நடவடிக்கை எடுக்க நிலுவையில் உள்ள வழக்குகள் | 240 |

### இ. ஒழுங்கு நடவடிக்கை வழக்குகளில் காலச் செலவழிவு

| | | | |
|---|---|---|---|
| 1) | மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | 246 | |
| | | மாதம் | நாட்கள் |
| 2) | குற்றச்சாட்டுக்குறிப்பாணை அனுப்பிய நாளில் இருந்து தேர்வாணையத்திற்கு அதன் கருத்தைக்கோர அரசு எடுத்துக் கொண்ட சராசரிக் காலம் | 10 | 00 |
| 3) | தேர்வாணையம் அரசுக்கு தனது கருத்தைத் தெரிவிக்க எடுத்துக் கொண்ட சராசரிக் காலம் | 02 | 00 |
| 4) | தேர்வாணையம் தனது கருத்தினை அனுப்பிய பிறகு ஆணை பிறப்பிக்க அரசு எடுத்துக் கொண்ட சராசரிக் காலம் | 10 | 00 |
| | எடுத்துக் கொண்ட மொத்த சராசரிக் காலம் | 22 | 00 |

மேல்முறையீட்டு மனு, மறு ஆய்வு மனு, ஒழுங்கு நடவடிக்கை, ஓய்வூதியத்தில் பிடித்தம் செய்தல் அல்லது குறைப்பு ஆகியவைகளில் அலுவலர்கள் தமது நேர்மைக்குப் புறம்பாக நடந்து கொண்ட வகையில் சாட்டப்பட்டக் குற்றச்சாட்டுகள் மற்றும் வேறு வகையில் சாட்டப்பட்டக் குற்றச்சாட்டுகள்கொண்ட வழக்குகள் என 486 வழக்குகளின் விவரம் பின் இணைப்பு -8ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### 3. சட்டமுறை, ஒழுங்குமுறை விதிகள் முதலியன :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள் 1954-ல் ஒழுங்குமுறை விதி 16(பி) பிற்பகுதியின்படி, தேர்வாணையத்தின் இசைவு கேட்கப்பட்ட 635 நிகழ்வுகளில் மாநில, சார்நிலை மற்றும் அமைச்சுப் பணிகளில் நியமனம் செய்ய இசைவு அளிக்கப்பட்டது. எந்த நிகழ்விலும் தேர்வாணையம் தன் இசைவினை மறுக்கவில்லை.

| வரிசை எண் (1) | பணி வகை (2) | இசைவு அளிக்கப்பட்டவை (3) | இசைவு மறுக்கப்பட்டவை (4) |
|---|---|---|---|
| 1. | மாநிலப் பணி | 2 | - |
| 2. | சார்நிலைப் பணி | 1 | - |
| 3. | அமைச்சுப்பணி | 632 | - |
| | கூடுதல் | 635 | - |

எப்பணிகளில் எந்தெந்தப் பதவிக்கு இசைவு அளிக்கப்பட்டது அல்லது மறுக்கப்பட்டது என்பதன் விவரங்கள் துறை வாரியாக பின் இணைப்பு -9ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**4. தற்காலிக நியமனங்கள்:**

கீழே குறிப்பிட்டவாறு நடப்புக்குறிய ஆண்டில் தற்காலிக நியமனம் செய்ய தேர்வாணையம் இசைவு அளித்துள்ளது.

| | இசைவு அளிக்கப்பட்டது | | இசைவு மறுக்கப்பட்டது | |
|---|---|---|---|---|
| காலம் (1) | மாநிலப் பணிகள் (2) | சார்நிலை/ அமைச்சுப் பணிகள் (3) | மாநிலப் பணிகள் (4) | சார்நிலை/ அமைச்சுப் பணிகள் (5) |
| 3 மாதங்களுக்கு மேல் 12 மாதங்களுக்குள் | - | - | - | - |
| 12 மாதங்களுக்கு மேல் 18 மாதங்களுக்குள் | - | - | - | - |
| 18 மாதங்களுக்கு மேல் 24 மாதங்களுக்குள் | - | - | - | - |
| 24 மாதங்களுக்கு மேல் | - | 1 | - | - |
| கூடுதல் | - | 1 | - | - |

24 மாதங்களுக்கு மேலும் தற்காலிக நியமனம் தொடரத் தேர்வாணையம் ஒரு நேர்வில் இசைவு அளித்தமை குறித்த விவரம் பின் இணைப்பு- 10ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**5. விதி 20 (எ) (3)-ன் படி இசைவு அளிக்கப்பட்டவை:**

தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதி 20 (எ) (3)-ன் படி அமைச்சுப் பணியில் மாநிலத்தில் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதலுக்கு தேர்வாணையத்தால் இசைவு அளிக்கப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை 52 ஆகும். எந்த நேர்விலும் இசைவு மறுக்கப்படவில்லை.

**6. விதிகள் பிறப்பித்தல் மற்றும் திருத்தம் வெளியிடல்:**

அரசால் 31 நேர்வுகளில் சட்டமுறை விதிகள் அல்லது திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அனைத்து நேர்வுகளிலும் தேர்வாணையம் கலந்தறியப்பட்டது.

**7. விதி தளர்த்துதல்:**

அறிக்கைக்குரிய ஆண்டில் எந்தநேர்விலும் வயது அல்லது கல்வித் தகுதி குறித்த சட்ட முறை விதிகள் அரசால் தளர்த்தப்படவில்லை.



115-67—2a

# பகுதி -5

## தெரிவுத் தேர்வுகள் தவிர இதரத் தேர்வுகள்

### 1) துறைத் தேர்வுகள்

2006-ஆம் ஆண்டு மே மற்றும் டிசம்பர் திங்களில் துறைத் தேர்வுகள் நடைபெற்றன. 305பாடங்களில் தேர்வுகள் நடத்தப்பட்டன. அத்தேர்வுகளுக்கு 86,991 நபர்கள் விண்ணப்பித்தனர்.

| வ.எண். | விவரம் | மே - 2006 | டிசம்பர்-2006 |
|---|---|---|---|
| 1. | மொத்த பாடங்கள் | 141 | 132 |
| 2. | தேர்வுத் தாட்களின் எண்ணிக்கை | 157 | 148 |
| 3. | விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை | 47259 | 39732 |
| 4. | தேர்வில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை | 36230 | 30689 |
| 5. | தேர்ச்சிப் பெற்றவர்களின் எண்ணிக்கை | 17326 | 15040 |
| 6 | தேர்ச்சி சதவீதம் | 48 | 49 |

### 2) அரையாண்டுத் தேர்வுகள்

இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, இந்திய வனப் பணி மற்றும் மாநிலப் பணி அலுவலர்களுக்கு அரையாண்டுத் தேர்வு மற்றும் முதல்நிலைத் தமிழ் மொழித் தேர்வு செப்டம்பர் 2006 மற்றும் மார்ச் 2007-ல் நடத்தப்பட்டன. இவற்றில் முறையே 42 மற்றும் 35 அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

3) டேராடூன் இந்தியப் பாதுகாப்புக் கல்லூரிப் பள்ளியில் சேருவதற்கான தேர்வை இத்தேர்வாணையம் இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்திற்காக ஆகஸ்டு 2006 மற்றும் பிப்ரவரி 2007-ல் நடத்தியது. அதில் 120 மற்றும் 110 மாணவர்கள் முறையே கலந்துகொண்டனர்.

# பகுதி - 6

## அரசும் தேர்வாணையமும்

### அ. தேர்வாணையக் கருத்தை அரசு ஏற்காமை:-

அறிக்கைக்குரிய ஆண்டில் அரசு தேர்வாணையத்தின் கருத்துரையில் இருந்து 4 வழக்குகளில் மாறுபட்டுள்ளது. இதன் விவரம் பின்வருமாறு:-

வழக்கு-1

(அரசாணை (3டி) எண் 29, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வள (FS.III)த் துறை, நாள் 22.09.2006)

அரசு, 1998-ம் ஆண்டு நவம்பர் மாதம் திரு. **J.** ஜனார்த்தனன், தேர்வு நிலை மீன்வளத்துறை ஆய்வாளர் என்பவர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைத் தொடர்பான ஆவணங்களை அனுப்பி வைத்து அதன் மீதான தேர்வாணையத்தின் கருத்தினை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைவிதிகளில் ஒழுங்கு முறை விதி 18(1)(ஆ)ன் கீழ் கோரியிருந்தது. தேர்வாணையம் அவ்வழக்கினை நன்கு ஆய்வு செய்த பின், 22.10.99 நாளிட்ட தமது கடிதத்தில், குற்ற அலுவலரைப் பணிநீக்கம் செய்யுமாறு அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

மீண்டும் 2000-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அரசு, குற்ற அலுவலர் மனநிலை சரியில்லாதவராக இருந்ததாலும், அவருடைய மனைவி மற்றும் குழந்தைகள் யாவரும் அவரையே முழுமையாக சார்ந்துள்ளதாலும், அவருக்குப் பெருந்தண்டனை ஒன்றை வழங்கி ஆணையிடின் அது கண்டிப்பாக அவரையும், அவரது குடும்பத்தினரையும் தெருவில் நிறுத்தி அவரது குடும்பத்தைக் கொடிய வறுமையில் தள்ளிவிடும் என்பதைக் கருத்திற்கொண்டு, இதனை ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி குற்ற அலுவலருக்கு சாதகமாக, அடிப்படை விதி 18(3)னைத் தளர்த்தி, அவருக்குப் பணிநீக்கம் என்ற தண்டனையைத் தவிர வேறொரு தண்டனையை விதிக்க உத்தேசித்திருந்ததாகவும், அவ்வாறே மாண்புமிகு தமிழக ஆளுநரிடம் அடிப்படை விதி 18(3) னைக் குற்ற அலுவலருக்கு சாதகமாக தளர்த்துவதற்கும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்தினை ஒழுங்குமுறை விதி 18(1) (b) (iii)ன் கீழ் கோருவதற்கும் ஏற்கனவே ஆணை பெற்றிருந்ததாகவும், ஆனால் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்தினை ஒழுங்குமுறை விதி 18 (1) (b) கீழ் கோரிவிட்டதாகவும் குறிப்பிட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள் 18(1)(ஆ)(III) கீழ் தேர்வாணயத்தின் கருத்தினைக் கோரியிருந்தது.

ஜனவரி 2001-ல் தேர்வாணையத்தின் கருத்தினை அளிக்க ஏதுவாக, வழக்கு தொடர்புடைய பதிவுருக்களை அனுப்புமாறு தேர்வாணையம் அரசிடம் கேட்டுக்கொண்டிருந்தது. அரசு, ஆகஸ்ட் 2006 வரை தேவையான பதிவுருக்களை அனுப்பவில்லை.

அரசு, இவ்வழக்கில் குற்ற அலுவலரின் மனநிலை சரியில்லாத நிலைமையை கருத்திற்கொண்டு அவர் தற்காலிக பணிநீக்கத்திலிருந்த 26.10.1999 முதல் 31.10.1999 வரையிலான காலத்தைத் தண்டனைக் காலமாக கருதவும், அவருக்குக் கிடைக்க வேண்டிய வழக்கமான ஓய்வூதிய பலன்களை அவர் அனுபவிப்பதற்கு எதுவாக அவர் வயது முதிர்வில் ஓய்வு பெற வேண்டிய நாளான 31.10.1999 பி.ப. அன்றே அவர் ஓய்வு பெற்றதாக கருதவும் முடிவு செய்து அவ்வாறே அரசானை (3டி)

எண்.29, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வள(FSIII)த்துறை, நாள் 22.9.06ல் தேர்வாணையத்தின் கருத்தினின்று மாறுபட்டு ஆணையிட்டுள்ளது.

தேர்வாணையம் வழக்கின் தன்மையையும், சூழ்நிலையையும் கருத்திற்கொண்டு குற்ற அலுவலரை பணிநீக்கம் செய்யுமாறு அரசுக்கு ஆலோசனை வழங்கியது. ஆனால் அரசு தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்காது, மாறுபட்டு ஆணை பிறப்பித்துள்ளது.

வழக்கு-2

(அரசாணை (3டி) எண் 9, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வள (கா.ப.1) துறை நாள் 7.3.2006)

திரு.பி.பால்ராஜ் (மறு ஆய்வு மனுதாரர்) என்பவர் பறக்கை கால்நடை மருந்தகத்தில் கால்நடை உதவி மருத்துவராகப் பணியாற்றியபோது அவரது பணியில் காணப்பட்ட குறைபாடுகளுக்காக அவர் மீது தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(ஆ)ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அவரின் விளக்கம் பெறப்பட்டது. அரசு, அவர் மீதான குற்றச்சாட்டுகளில் சில நிரூபணமாகின்றன என்று கருதி நிரூபணமான குற்றச்சாட்டுகளுக்கு வழங்கப்படவேண்டிய தண்டனை குறித்து தற்காலிக முடிவெடுத்து தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது. தேர்வாணையம் இவ்வழக்கினை விரிவாக ஆய்வு செய்து நிரூபனமாகியுள்ள குற்றச்சாட்டுகளுக்காக மறு ஆய்வு மனுதாரருக்கு "பணிநீக்கம்" என்ற தண்டனையை வழங்க ஆலோசனை அளித்தது. தேர்வாணையத்தின் கருத்துகளை ஏற்று மறு ஆய்வு மனுதாரருக்கு பணிநீக்கம் என்ற தண்டனையை வழங்கி அரசு ஆணையிட்டது.

மேற்கண்ட தண்டனையை எதிர்த்து மறுஆய்வு மனுதாரர் அரசுக்கு மறு ஆய்வு மனு ஒன்று சமர்ப்பித்தார். மறு ஆய்வு மனு மற்றும் அதன் தொடர்பான ஆவணங்களை அனுப்பிவைத்து அதன்மீது தேர்வாணையத்தின் கருத்தினை 2002ஆம் ஆண்டு அரசு கோரியது. இவ்வழக்கு தொடர்பான ஆவணங்களைப் பரிசீலனை செய்த தேர்வாணையம் மறு ஆய்வு மனுதாரர் தனது மறு ஆய்வு மனுவில் புதியதாகவும், எற்கத்தக்கதாகவும் எதுவும் குறிப்பிடவில்லை என்பதாலும் விசாரனை அலுவலர் தெளிவான ஆதாரங்களுடன் குற்றச்சாட்டுகள் நிரூபணமாகியுள்ளதை வெளிக்கொணர்ந்துள்ளார் என்பதாலும் சாரமற்ற ஏற்றுக்கொள்ளத்தக்க விளக்கங்கள் இல்லாத இந்த மறு ஆய்வு மனுவினை நிராகரிக்கலாம் என அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

ஆனால், அரசு மறு ஆய்வு மனுதாரருக்கு வழங்கப்பட்ட "பணிநீக்கம்" என்ற தண்டனையை "நான்கு ஆண்டு காலத்திற்குத் திரண்ட பயனுடன் ஊதிய உயர்வு நிறுத்தம்" என்ற தண்டனையாக மாற்றி ஆணை பிறப்பித்துள்ளது.

மறு ஆய்வு மனுதாரர் புரிந்த குற்றங்களின் கடுமையைக் கருத்தில் கொண்டு அவரது மறுஆய்வு மனுவினை நிராகரிக்க தேர்வாணையம் ஆலோசனை வழங்கியது. ஆனால் அரசு தேர்வாணையத்தின் கருத்தினை ஏற்காது அதற்கு மாறுபட்டு அரசாணை பிறப்பித்துள்ளது.

வழக்கு-3

(அரசு (நிலை) ஆணை எண் 1206, உள்(சிறை) துறை, நாள் 18.12.2006)

திரு. க. சாலமன், இரண்டாம் நிலைக்காவலர் என்பவர் திருச்சி மத்திய சிறையிலிருந்து வேலூர் காவலர் பயிற்சிப்பள்ளிக்கு பயிற்சி பெறும் பொருட்டு அனுப்பப்பட்ட போது பயிற்சிப்பள்ளி சிறை அலுவலரிடம் கன்னியமற்ற முறையில் நடந்து கொண்டுள்ளார். இவரது செயல் பயிற்சி காவலர்கள் மத்தியில் ஒழுங்கீனத்தையும் கட்டுபாட்டின்மையையும் தோற்றுவிக்கும் வகையில் அமைந்துள்ளதால், அன்னாரின் மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(ஆ)வின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வேலூர் மத்திய சிறைக் கண்காணிப்பாளர் அவர்களால் "பணியறவு" தண்டனை வழங்கப்பட்டது. மேற்படி தண்டனையினை எதிர்த்து திரு. க. சாலமன், சென்னை சரக சிறைத்துறைத் துணைத்தலைவர் மற்றும் கூடுதல் சிறைத்துறை இயக்குநருக்கு அளித்த மேல்முறையீடு மற்றும் மனு ஆகியவை நிராகரிக்கப்பட்டன.

திரு க. சாலமன் என்பவர் அன்னாருக்கு வழங்கப்பட்ட "பணியறவு" தண்டனையை ரத்து செய்ய கோரி அரசிடம் மனு செய்து கொண்டார். அவரது மனுமீதான தேர்வாணையத்தின் கருத்தினை 6.1.2006 நாளிட்ட கடிதம் மூலம் அரசு கோரியது.

தேர்வாணையம் தனது 2.6.2006 நாளிட்ட கடிதத்தில் இந்நேர்வில் மனுதாரருக்கு வழங்கப்பட்ட "பணியறவு" என்னும் தண்டனை சரியானதே என்று தீர்மானித்து மனதாரரின் மனுவினை நிராகரிக்கலாம் என அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

தற்போது அரசு, தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு மனுதாரருக்கு வழங்கப்பட்ட "பணியறவு" என்னும் தண்டனை மிகவும் கடுமையானது எனக்குறிப்பிட்டு மனுதாரருக்கு வழங்கப்பட்ட "பணியறவு" என்னும் தண்டனையை ரத்து செய்து அவரை மீண்டும் பணியில் சேர்க்கவும், அவருக்கு "பணியறவு" என்னும் தண்டணைக்கு பதிலாக அவரது ஊதிய உயர்வினை 5 வருடங்களுக்கு திரண்ட பயனுடன் நிறுத்தம் செய்யலாம் என்றும், மனுதாரர் தற்செயல்விடுப்பு தவிர பிற ஏனைய விடுப்புகளில் சென்றால் தண்டனை காலம் நீட்டிக்கும் தன்மையுடையது என்றும் மேலும் இது அவரது ஓய்வூதியத்தினை பாதிக்கும் என்றும் தண்டனை வழங்கி அரசு (நிலை) ஆணை எண் 1206, உள் (சிறை-2) துறை, நாள் 18.12.2006ல் வெளியிட்டது.

தேர்வாணையம் தனது கருத்தில் மனுதாரருக்கு வழங்கப்பட்ட "பணியறவு" எனும் தண்டனை சரியானதே என்று தீர்மானித்து மனுதாரரின் மனுவினை நிராகரிக்கலாம் என அரசுக்கு தெரிவித்திருந்தது. ஆனால் அரசு தேர்வாணையத்தின் கருத்தினை எற்காது அதிலிருந்து மாறுபட்டு அரசானை வெளியிட்டுள்ளது.

வழக்கு-4

(அரசானை(டி) எண் 640, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் (E2) துறை, நாள் 01.11.2006)

திரு. எஸ்.பி.கமலகண்ணன், முன்னாள் விரிவாக்க அலுவலர் (பஞ்சாயத்து) ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம் என்பவர் ஓசூர் பஞ்சாயத்து ஒன்றியத்தில் நீர்வழங்கல் திட்டத்தில் நீரேற்றும் மோட்டார் இயந்திரங்களைப் பராமரிப்பதற்காக குழாய்கள் மற்றும் உதிரி பாகங்கள் போன்ற பொருட்களை

வாங்கியதில் நடைபெற்ற முறைகேடுகளுக்காக அவர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில், அவருக்கு தண்டனையாக அவரது ஓய்வதியத்திலிருந்து மாதம் ரூ.50/- வீதம் 6 மாதங்களுக்கு பிடித்தம் செய்ய உத்தேச முடிவெடுத்து அதன் மீதான தேர்வாணையத்தின் கருத்தினை 26.09.2005 நாளிட்ட கடிதம் மூலமாக அரசு கோரியது.

தேர்வாணையம் தனது 13.3.2006 நாளிட்ட கடிதத்தில் இந்நேர்வில் இதே குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்ட உடன் குற்ற அலுவலர் திரு. M. நஞ்சுண்டன் என்பவர் மீதான குற்றச்சாட்டு தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தின் வழிகாட்டுதலின்படி அரசினால் தள்ளுபடி செய்யப்பட்டதால், அதன் வழியைப் பின்பற்றி குற்ற அலுவலர் திரு. எஸ்.பி. கமலகண்ணன் மீதான குற்றசாட்டினைத் தள்ளுபடி செய்யலாம் என அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

ஆனால் அரசு, தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு குற்ற அலுவலர் மீது அவரது ஓய்வுதியத்திலிருந்து மாதம் ரூ.50/- வீதம் 6 மாதங்களுக்கு பிடித்தம் எனும் தண்டனையை வழங்கி அரசாணை (டி) எண் 640, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் (E2) நாள் 1.11.2006ல் ஆணை பிறப்பித்துள்ளது.

தேர்வாணையம் தனது கருத்தில் குற்ற அலுவலர் மீதான குற்ற சாட்டினைத் தள்ளுபடி செய்யலாம் என ஆலோசனை தெரிவித்திருந்தது. ஆனால் அரசு தேர்வாணையத்தின் ஆலோசனையை ஏற்காது அதிலிருந்து மாறுபட்டு அரசாணை வெளியிட்டுள்ளது.

ஆ. <u>தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்படாமை :-</u> 'ஏதுமில்லை'

இ. அரசின் கொள்கை சம்பந்தப்பட்ட விவகாரங்கள் அல்லது தவிர்க்க முடியாத காரணங்களைத் தவிர பொதுவாகத் தேர்வாணையத்தின் ஆலோசனைகளை அரசு ஏற்றுக்கொள்ளும் என்ற மரபினை விட்டு விலகி அரசு ஆணையிட்டுள்ளது என்பதை வருத்தத்துடன் குறிப்பிடுவதோடு எதிர் காலத்தில் இது தொடராது என்று தேர்வாணையம் நம்புகிறது. இப்பொருள் குறித்து ஐந்து ஆண்டு புள்ளி விவரம் பின் இணைப்பு-12 ல் கொடுக்கப்பட்டுள்ளது,

**ஏற்புரை:-**

தேர்வாணையம் நடத்திய பல்வேறு தேர்வுகளுக்கு போதிய இட வசதி செய்து கொடுத்து மனப்பூர்வமாக ஒத்துழைப்பு அளித்த பல்வேறு கல்வி நிறுவனங்கள் மற்றும் அதன் அலுவலர்களுக்கும் தேர்வாணையம் தனது பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறது.

மாநில அரசின் கீழ் உள்ள பல்வேறு பதவிகளுக்கு நடத்தப்பட்டத் தேர்வுகளுக்கும் அலுவலர்களின் தெரிவுகளுக்கும் தேர்வாணையத்தின் அழைப்பினை உடனடியாக ஏற்று அவர்களுடைய சிரமங்களைப் பாராமல் தேர்வாணையத்திற்கு உதவி புரிந்த தேர்வாளர்கள் மற்றும் ஆலோசனை வழங்கிய வல்லுநர்கள் ஆகியோருக்கு இத்தேர்வாணையம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலமாக நியமனம் பெற உரியவேட்பாளர்களை பரிந்துரை செய்ய நியமிக்கப்பட்டுள்ள துறைத்தேர்வு குழுக்களின் பணி செவ்வனே நடைபெற ஒத்துழைப்பு நல்கிய பல்வேறு அரசுத்துறை செயலாளர்களுக்கும், துறைத்தலைவர்களுக்கும் தேர்வாணையம் தன் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

முடிவாக, ஆண்டு முழுவதும் உண்மையாகவும் மற்றும் திறமையாகவும் பணிபுரிந்த அதனுடைய ஊழியர்களுக்கும் தேர்வாணையம் தனது பாராட்டினைத் தெரிவித்துக்கொள்கிறது.

| | |
|---|---|
| **திருமதி. யாஸ்மீன் அகமது, இ.ஆ.ப. (ஓய்வு)** | **தலைவர்** |
| **திரு. அ. நவநீதகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல்.,** | **உறுப்பினர்** |
| **திருமதி.பா. நீலாம்பிகை, எம்.ஏ., பி.எல்.,** | **உறுப்பினர்** |
| **திருமதி. நீ.கு. கலைச்செல்வி, பி.எஸ்.சி., பி.எல்.,** | **உறுப்பினர்** |
| **பேராசிரியர். ஆர். சுப்பிரமணியன், பி.எஸ்.சி., எம்.எல்.,** | **உறுப்பினர்** |
| **திரு. பெ. தீர்த்தாரப்பன், பி.எஸ்.சி., பி.டி.,** | **உறுப்பினர்** |
| **திரு. இரா. செங்குட்டுவன், பி.இ., பி.ஜி.டி.எம்.,** | **உறுப்பினர்** |
| **திருமதி. சி.டி. திலகவதி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்., பி.ஜி.டி.ஜே.எம்.சி.,** | **உறுப்பினர்** |
| **டாக்டர். ரெ. நாராயணசாமி, எம்.ஏ., பி.எட்., பிஎச்.டி.,** | **உறுப்பினர்** |
| **திரு. மு. இராமசாமி எம்.எஸ்.சி., எம்.ஏ., பி.எல்.,** | **உறுப்பினர்** |

தமிழ்நாடு அரசுப் பணியாளர்
தேர்வாணையம். சென்னை-2.

ரமேஷ் சந்த் மீனா இ.ஆ.ப.,
செயலாளர்

நாள் :13.11.2007

## பின் இணைப்பு - 1

### 31.3.2007- இல் உள்ளபடி தேர்வாணையத்தின் பணியாளர் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | துணைச் செயலாளர் | 6 |
| 2. | சார் செயலாளர் | 35 |
| 3. | கணக்கு அலுவலர் | 1 |
| 4. | உதவி கணக்குஅலுவலர் | 1 |
| 5. | ஆராய்ச்சி அலுவலர் | 1 |
| 6. | நூலகர் | 1 |
| 7. | முதுநிலை ஆராய்ச்சி உதவியாளர் | 1 |
| 8. | பிரிவு அலுவலர் | 147 |
| 9. | நேர்முக செயலாளர் | 1 |
| 10. | உள்ளீடு விளையளவு மேற்பார்வையாளர் (கணிப்பொறி) | 1 |
| 11. | உள்ளீடு விளையளவு இயக்குபவர் (கணிப்பொறி) | 1 |
| 12. | அடிப்படை விவரங்கள் பதிவு செய்பவர் (கணிப்பொறி) | 8 |
| 13. | உதவி பிரிவுஅலுவலர் மற்றும் கணக்கர் | 269 |
| 14. | நேர்முக உதவியாளர் | 7 |
| 15. | நேர்முக எழுத்தர் | 6 |
| 16. | தொலைபேசி இயக்குபவர் | 2 |
| 17. | உதவியாளர் | 324 |
| 18. | தட்டச்சர் | 64 |
| 19. | ஊர்தி ஓட்டுநர் | 15 |
| 20. | பதிவுரு எழுத்தர் மற்றும் பதிவுரு உதவியாளர் | 36 |
| 21. | மின் தூக்கி இயக்குபவர் | 1 |
| 22. | முதன்மை ஏவலர் | 1 |
| 23. | அலுவலக உதவியாளர் | 119 |
| 24. | காவலர் | 6 |
| 25. | பெருக்குபவர் | 4 |
| 26. | துப்புரவுப்பணியாளர் | 3 |
| 27. | குடிநீர் வைப்பவர் | 1 |

# பின் இணைப்பு - II

## நேரடித் தெரிவு இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட பதவிகளின் விவரம் - 2006-2007 ஆம் ஆண்டு

| வரிசை எண் | பதவி, துறை மற்றும் பணியின் பெயர் | விண்ணப்பம் பெற்ற கடைசி நாள் | தெரிவு முடிவுகள் தெரிவிக்கப்பட்ட நாள் | காலியிடங்களின் எண்ணிக்கை | | | | | | பெறப்பட்ட விண்ணப்பங்கள் | முதனிலைத்தேர்வில் கலந்து கொண்டவர்கள் | முதன்மைத்தேர்வில் கலந்து கொண்டவர்கள் | வாய்மொழித் தேர்வில் கலந்து கொண்டவர்கள் | | | | | | இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் | | | | | | தெரிவு செய்யப்பட்டவர்களின் கல்வித் தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ப.வ | பழ | மிபிவ | பிவ | பொது | கூடுதல் | | | | ப.வ | பழ | மிபிவ | பிவ | மற்ற | கூடுதல் | ப.வ | பகு | மிபிவ | பிவ | மற்ற | கூடுதல் | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) | (18) | (19) | (20) | (21) | (22) | (23) | (24) | (25) | (26) | (27) |
| 1. | <u>மாநிலப்பணிகள்</u><br>உதவி அறுவை மருத்துவர், தமிழ்நாடு மருத்துவப் பணி. | 04.08.05<br>(WOMEN) | 17.04.06 | 342<br>(101) | 18<br>4 | 376<br>(109) | 543<br>(157) | 546<br>(162) | 1825<br>(533) | 7123 | - | 5368 | 629<br>324 | 26<br>11 | 775<br>398 | 1517<br>698 | 69<br>33 | 3016<br>1464 | 312<br>156 | 16<br>11 | 390<br>193 | 783<br>338 | 30<br>15 | 1531<br>713 | எம்.பி.பி.எஸ்.-1294<br>எம் டி./எம்.எஸ்-237 | 293 தனிசிறப்புக்கான காலியிடங்கள்உரிய கல்வித்தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் இல்லாததால் நிரப்பப்படவில்லை.<br>1 காலியிடம் உயர்நீதிமன்ற ஆணைப்படி நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.<br>318 பி.வ., 92 மி.பி.வ,34 ப.வ. 2-ப.கு. பொதுப்போட்டியில் தெரிவு பெற்றனர். |
| 2. | உதவி பல் மருத்துவர், தமிழ்நாடு மருத்துவப் பணி | 13.10.06<br>(Women) | 07.02.07 | 7<br>(2) | 1 | 7<br>(2) | 12<br>(4) | 12<br>(4) | 39<br>(12) | 1965 | - | 1505 | 16 | 3 | 17 | 40 | 3 | 79 | 8<br>3 | 1<br>1 | 8<br>2 | 20<br>8 | 2<br>2 | 39<br>16 | பி.டி.எஸ்-39 | 1-ப.வ., 1-மி.பி.வ., 8-பி.வ. பொதுப் போட்டியில் தெரிவு பெற்றனர் |
| 3 | கால்நடை உதவி மருத்துவர், தமிழ்நாடு கால்நடை பராமரிப்புப் பணி | 09.09.05<br>(WOMEN) | 08.03.07 | 45<br>14 | 3<br>1 | 50<br>15) | 75<br>23 | 77<br>23 | 250<br>76 | 1390 | - | 1146 | 109<br>41 | 9<br>- | 136<br>49 | 245<br>103 | 4<br>2 | 503<br>195 | 55<br>19 | 3 | 67<br>27 | 122<br>51 | 3<br>2 | 250<br>99 | பி.வி.எஸ்.சி-205<br>எம்.வி.எஸ்.சி.-45 | 10-ப.வ., 17-மி.பி.வ., 47-பி.வ. பொதுப் போட்டியில் தெரிவு பெற்றனர் |
| 4 | உதவி இயக்குநர், மீன் வளம், தமிழ்நாடு மீன் வளப்பணி | 06.01.99<br>(WOMEN) | 23.03.07 | - | - | - | 1<br>- | 2<br>1 | 3<br>1 | 93 | - | 34 | - | - | 1 | 5 | 3 | 9 | - | - | 1<br>1 | 1 | 1 | 3<br>1 | எம்.எப்.எஸ.சி-3 | 1-பி.வ., 1-மி.பி.வ., பொதுப் போட்டியில் தெரிவு பெற்றனர் |
| | <u>சார்நிலைப் பணிகள்</u> | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 5 | தொகுதி - IV பணிகள் | 21.09.05<br>(WOMEN) | 11.08.06 | 95<br>27 | 3<br>1 | 88<br>25 | 111<br>32 | 135<br>41 | 432<br>126 | 3,54,742 | - | 3,45,586 | - | - | - | - | - | - | 100<br>27 | 3<br>1 | 106<br>28 | 212<br>47 | 11<br>5 | 432<br>108 | எஸ்.எஸ்.எல்.சி-10<br>எச்.எஸ்.சி-84<br>இளநிலைபட்டம்-234<br>முதுநிலைபட்டம்-104 | 5-ப.வ., 18-மி.பி.வ., 101-பி.வ. பொதுப் போட்டியில் தெரிவு பெற்றனர் |
